# தமிழ் நூல்களைச் சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. படிவம்-A- யில் பதிப்பாளர் / விநியோகஸ்தர் பற்றிய சுய விபரங்களும், படிவம் – B -யில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் படி புத்தகப் பட்டியலும் அனைத்து விவரங்களும் சரியானபடி ஆங்கில நூல்கள் எனில், ஆங்கிலத்திலும் (Microsoft-Excel, Arial Font size 12 வடிவத்தில்), தமிழ் நூல்கள் எனில் தமிழில் Unicode Font -இல் தட்டச்சு செய்து, Microsoft-Excel Format -ல் பூர்த்தி செய்யப்படவேண்டும். ஒரே பதிப்பகம் தமிழ் / ஆங்கிலம் நூல்கள் சேர்த்து வழங்கும்பட்சத்தில் தமிழ் நூல்களுக்குத் தனியாகவும், ஆங்கில நூல்களுக்குத் தனியாகவும் படிவங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

2. பூர்த்தி செய்யப்பட்ட **படிவம் A** - மற்றும் **படிவம் - B** இல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி, **MS-Excel Format இலும்** புத்தகப் பட்டியலை தயார் செய்து **kclbookselection@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தவறாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

3. படிவங்களில் பதிப்பக முத்திரையிட்டு தவறாமல் கையொப்பமிடவேண்டும். படிவங்களில் பதிப்பாளர் அல்லது விநியோகஸ்தர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் தவிர வேறு எவரும் கையொப்பம் இடலாகாது.

4. மேற்கண்ட இரு படிவங்களின் பதிப்பாளர் / விநியோகஸ்தர் முத்திரையிடப்பட்ட அசல் படிவங்களை, முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர், அண்ணா நூற்றாண்டு நூலகம், கோட்டூர்புரம், சென்னை – 600 085 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபாலிலோ **09.12.2022 அன்று மாலை 5.00 மணிக்குள்** அனுப்பி வைக்க வேண்டும்.

5. ஒரு நூலுக்கு ஒரு மாதிரி மட்டும் சமர்ப்பித்தல் போதுமானது.

6. நூலின் விலை, நூலில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். இரப்பர் முத்திரை அல்லது தாள் ஒட்டுதல் முறையில் விலைகள் இருப்பின் அந்நூல்/நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. தரமான தாளில் அச்சிடப்பட்ட நூல்கள் மட்டுமே தேர்வுக்கு பரிசீலிக்கப்படும். நியூஸ்பிரிண்ட் அல்லது தரமில்லாத தாள்களில் அச்சான நூல்கள் வாங்கப்படமாட்டாது.

8. PIN அடித்து கட்டுமானம் செய்த நூல்கள், ஜெராக்ஸ் படிகள், DTP நூல்கள், அதிக இடைவெளிவிட்டு அச்சிடப்பட்ட நூல்கள், தலைப்பு பக்கம் ஒட்டப்பட்ட நூல்கள்,

பதிப்பாண்டு திருத்தம் செய்த நூல்கள் ஆகியவை பரிசீலனைக்கு கட்டாயமாக ஏற்கப்படமாட்டாது.

9. நூல் தேர்வுக் குழுவிற்கும், பொது நூலக இயக்குநருக்கும் நூலைத் தேர்வு செய்யவோ அல்லது தள்ளுபடி செய்யவோ அதிகாரம் உண்டு.

10. பரிசீலனைக்கு பெறப்படும் நூல்களில் **நூல் தேர்வுக்குழுவினரால் தேர்வு செய்யப்படும் நூல்களின் பதிப்பகங்களுக்கு மட்டுமே கொள்முதல் நூல் ஆணை வழங்கப்படும்.**

11. தேர்வுக்குழு தேர்வு செய்த நூல்களிலிருந்து நிதிநிலைக்கேற்ப தேவையான எண்ணிக்கை படிகள் மட்டுமே வாங்கப்படும். இது தொடர்பாக பொது நூலக இயக்குநரின் முடிவே இறுதியானது.

12. மேற்கண்ட வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்கள் செய்வதற்கு அல்லது பொது நூலக இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.

மேலும், இது தொடர்பான விவரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர்,**
**அண்ணா நூற்றாண்டு நூலகம்,**
**கோட்டூர்புரம்,**
**சென்னை – 600 085**
**தொலைபேசி எண்கள். 044-22201033 / 044-22201011.**

**பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ.)**